# மேல் மாகாண ஆளுநர் காரியாலயம்

<u>மேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோருதல்</u>

2199/10 ஆம் இலக்க 2020.10.27 ஆந் திகதி இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 2021.10.04 ஆந் திகதி இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி பத்திரிகையினால் திருத்தப்பட்ட இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவை விதிமுறைகளின் 5 ஆம் அத்தியாயம் மற்றும் 2064/8 ஆம் இலக்க மற்றும் 2018.03.26 ஆந் திகதி அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அதிகார ஒப்படைப்பிற்கு இணங்க, இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிர்வாக தரம் 1 இல் வெற்றிடமாக உள்ள மேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு இங்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிர்வாக தரம் 1 இன் அலுவகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்வது இடம் பெறும்.

03. கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி வழங்கும் ஒழுங்கு முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

<table>
<tr>
<td>சேவை அனுபவம் (உச்சப் புள்ளிகள். 55)</td>
<td>நிர்வாக தரம் I இன் உயிர்ப்பான சேவைக் காலத்திற்காக - ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள்.<br><br>இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிர்வாக தரம் 1 இன் உயிர்ப்பான சேவைக்காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>ஒரு வருடத்தினைவிடக் குறைந்த மற்றும் ஆறு மாதங்களைவிட கூடிய சேவை அனுபவத்திற்காக 2.5 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஆறு மாதத்திற்கு குறைவான காலம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.<br><br>உயிர்ப்பான சேவைக்காலம் என்பது உரிய பதவிக்குரிய சம்பளத்தினைப் பெற்று உண்மையாக கடமையில் ஈடுபட்ட சேவைக் காலம் ஆகும். அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மகப்பேறு விடுமுறை தவிர ஏனைய எல்லா சம்பள மற்ற விடுமுறை காலமும் உயிர்ப்பான சேவைக் காலத்திற்குள் கணக்கிடப்படமாட்டாது.</td>
</tr>
<tr>
<td>திறமை (உச்ச புள்ளிகள் 45)</td>
<td>1. வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடு (உச்ச புள்ளிகள் 15)<br><br>நேர்முகப் பரீட்சை இடம் பெறும் தினத்திற்கு முந்திய 05 வருடகாலத்தினுள் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டில் பெற்ற மதிப்பீட்டிற்கு இணங்க பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>
<table>
<tr><td>செயலாற்றுகை மதிப்பீட்டில் பெற்ற மதிப்பீட்டு</td><td>ஒரு வருடத்திற்காக பெற்ற உச்சமான புள்ளிகள்</td></tr>
<tr><td>சிறந்த</td><td>3 புள்ளிகள்</td></tr>
<tr><td>சராசரி பெறுமதிக்கு மேல்</td><td>2 புள்ளிகள்</td></tr>
<tr><td>திருப்திகரம்</td><td>1 புள்ளிகள்</td></tr>
</table>
<br>2. வெளியீடுகள் (உச்ச புள்ளிகள் 06)<br>(ஆவணப்படுத்தப்பட்ட சாட்சி முன்வைக்கப்பட வேண்டும்)<br><br>(அ) வெளியிட்ட சஞ்சிகை/ புத்தகம் மற்றும் அத்தியாயம்/ பயிற்சி கூறுகள்/ ஆய்வு நடைமுறைகளின் படைப்புரிமை ( ஒன்றுக்கு உச்சமான புள்ளிகள் 01 வீதம் )<br><br>(ஆ) வெளியிடப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் / பயிற்சிக்குத் தேவையான பொருட்கள் / நடுவர்களால் ஆய்வுக்குட்படுத்தப்படாத ஆய்வு அறிக்கைகள் /</td>
</tr>
</table>

பத்திரிகைகளில் மற்றும் சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட அறிவியல் கட்டுரைகள் / இணைய வெளியீட்டு படைப்புரிமை **(ஒன்றுக்கு உச்சமான புள்ளிகள் 0.5 வீதம் )**

**3. பாராட்டுகளும் விருதுகளும் (அதிக பட்ச புள்ளிகள் 04)**
(ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் )

(அ) பாராட்டுக்கள் (பொதுப்படிவம் 230பீ இன் மூலம் சமர்ப்பிக்கப்படும் பாராட்டுக்களுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்) **(ஒன்றுக்கான உச்ச புள்ளிகள் 01 ஆகும்)**

(ஆ) விருதுகள் - விருதுகளுக்காக பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| விருதுகள் | ஒரு விருதுக்காக வழங்கப்படும் புள்ளிகள் |
|---|---|
| ஆயுர்வேத வைத்திய துறைக்கு வழங்கிய பங்களிப்பிற்கான சர்வதேச விருது | 02 புள்ளிகள் |
| ஆயுர்வேத வைத்திய துறைக்கு வழங்கிய பங்களிப்பிற்கான தேசிய விருது( உதா- ஜனாதிபதி விருது) | 01 புள்ளிகள் |
| ஆயுர்வேத வைத்திய துறைக்கு வழங்கிய பங்களிப்பிற்கான தேசிய/ மாகாண மட்டத்தின் விசேட விருது( உதா- மேலே கூறப்பட்ட விருதுகளுக்கு மேலதிகமாக உள்ள ஏனைய விருது) | 0.5 புள்ளிகள் |

**4. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறைமை (உச்ச புள்ளிகள் 20)**

பின்வரும் விடயங்கள் தொடர்பாக விண்ணப்பதாரியினால் நேர்முகப் பரீட்சையில் தொடர்பாடல் திறன், எண்ணங்கள், பகுப்பாய்வு செய்யும் திறன் தொடர்பாக காட்டும் திறமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

(அ) தற்கால நிலைமையினை பகுப்பாய்வு செய்தல்
(ஆ) பிரச்சினைகள் அல்லது தேவைகளை இனங்காணுதல் அத்துடன் தீர்வுகளை பிரேரித்தல்
(இ) இனங்காணப்பட்ட தடைகளை வெற்றிகொள்ளும் மூல உபாயத் திட்டங்கள்

04. இந்தப் பதவிக்கு நியமிக்க தகுதியான இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாகம் தரம் I இன் அதிகாரிகள் இல்லையென்றால் மட்டுமே, அந்தப் பதவிக்கு நிரந்தர அதிகாரி நியமிக்கப்படும் வரை சம்பந்தப்பட்ட பதவியின் கடமைகளை மேற்கொள்ள இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாகம் தரம் II இன் அதிகாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவது இடம்பெறும்.

05. இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிர்வாக தரம் II இன் அலுவகர்களின் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் புள்ளி வழங்கும் ஒழுங்கு முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| **சேவை அனுபவம் (உச்சப்** | **நிர்வாக தரம் II இல் உயிர்ப்புள்ள சேவைக் காலத்திற்காக - ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள்.** |

<table>
<tr>
<td>புள்ளிகள். 55)</td>
<td>
இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிர்வாக தரம் II இன் உயிர்ப்பான சேவைக்காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>
ஒரு வருடத்தினைவிடக் குறைந்த மற்றும் ஆறு மாதங்களைவிட கூடிய சேவை அனுபவத்திற்காக 2.5 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஆறு மாதத்திற்கு குறைவான காலம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.<br><br>
உயிர்ப்பான சேவைக்காலம் என்பது உரிய பதவிக்குரிய சம்பளத்தினைப் பெற்று உண்மையாக கடமையில் ஈடுபட்ட சேவைக் காலம் ஆகும். அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மகப்பேறு விடுமுறை தவிர ஏனைய எல்லா சம்பள மற்ற விடுமுறை காலமும் உயிர்ப்பான சேவைக் காலத்திற்குள் கணக்கிடப்படமாட்டாது.
</td>
</tr>
<tr>
<td>திறமை<br>(உச்ச புள்ளிகள்<br>45)</td>
<td>
1. வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடு (உச்ச புள்ளிகள் 15)<br>
நேர்முகப் பரீட்சை இடம் பெறும் தினத்திற்கு முந்திய 05 வருடகாலத்தினுள் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டில் பெற்ற மதிப்பீட்டிற்கு இணங்க பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்<br><br>
<table>
<tr><td>செயலாற்றுகை மதிப்பீட்டில் பெற்ற மதிப்பீட்டு</td><td>ஒரு வருடத்திற்காக பெற்ற உச்சமான புள்ளிகள்</td></tr>
<tr><td>சிறந்த</td><td>3 புள்ளிகள்</td></tr>
<tr><td>சராசரி பெறுமதிக்கு மேல்</td><td>2 புள்ளிகள்</td></tr>
<tr><td>திருப்திகரம்</td><td>1 புள்ளிகள்</td></tr>
</table><br>
2. வெளியீடுகள் (உச்ச புள்ளிகள் 06)<br>
(ஆவணப்படுத்தப்பட்ட சாட்சி முன்வைக்கப்பட வேண்டும்)<br><br>
(அ) வெளியிட்ட சஞ்சிகை/ புத்தகம் மற்றும் அத்தியாயம்/ பயிற்சி கூறுகள்/ ஆய்வு நடைமுறைகளின் படைப்புரிமை ( ஒன்றுக்கு உச்சமான புள்ளிகள் 01 வீதம் )<br><br>
(ஆ) வெளியிடப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் / பயிற்சிக்குத் தேவையான பொருட்கள் / நடுவர்களால் ஆய்வுக்குட்படுத்தப்படாத ஆய்வு அறிக்கைகள் / பத்திரிகைகளில் மற்றும் சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட அறிவியல் கட்டுரைகள் / இணைய வெளியீட்டு படைப்புரிமை (ஒன்றுக்கு உச்சமான புள்ளிகள் 0.5 வீதம் )<br><br>
3. பாராட்டுகளும் விருதுகளும் (அதிக பட்ச புள்ளிகள் 04)<br>
(ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் )<br><br>
(அ) பாராட்டுக்கள் (பொதுப்படிவம் 230பீ இன் மூலம் சமர்ப்பிக்கப்படும் பாராட்டுக்களுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும் ) ( ஒன்றுக்கான உச்ச புள்ளிகள் 01 ஆகும்)<br><br>
(ஆ) விருதுகள் - விருதுகளுக்காக பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>
<table>
<tr><td>விருதுகள்</td><td>ஒரு விருதுக்காக வழங்கப்படும் புள்ளிகள்</td></tr>
<tr><td>ஆயுர்வேத வைத்திய துறைக்கு வழங்கிய பங்களிப்பிற்கான சர்வதேச விருது</td><td>02 புள்ளிகள்</td></tr>
<tr><td>ஆயுர்வேத வைத்திய துறைக்கு வழங்கிய பங்களிப்பிற்கான தேசிய விருது( உதா- ஜனாதிபதி விருது)</td><td>01 புள்ளிகள்</td></tr>
</table>
</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | |
| ஆயுர்வேத வைத்திய துறைக்கு வழங்கிய பங்களிப்பிற்கான தேசிய/ மாகாண மட்டத்தின் விசேட விருது( உதா- மேலே கூறப்பட்ட விருதுகளுக்கு மேலதிகமாக உள்ள ஏனைய விருது) | 0.5 புள்ளிகள் |

4. **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறைமை (உச்ச புள்ளிகள் 20)**

பின்வரும் விடயங்கள் தொடர்பாக விண்ணப்பதாரியினால் நேர்முகப் பரீட்சையில் தொடர்பாடல் திறன், எண்ணங்கள், பகுப்பாய்வு செய்யும் திறன் தொடர்பாக காட்டும் திறமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

(அ) தற்கால நிலைமையினை பகுப்பாய்வு செய்தல்

(ஆ) பிரச்சினைகள் அல்லது தேவைகளை இனங்காணுதல் அத்துடன் தீர்வுகளை பிரேரித்தல்

(இ) இனங்காணப்பட்ட தடைகளை வெற்றிகொள்ளும் மூல உபாயத் திட்டங்கள்

06. மேல் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பத்தினை இங்கு தரவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

07. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் 2025.08.05 ஆந் திகதியாகும். முன்வைக்கப்படும் விண்ணப்பம் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன், " **மேல் மாகாண ஆளுநரின் செயலாளர், ஆளுநர் காரியாலயம், இலக்கம் 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல**" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்ட வேண்டும்.

08. பூரணமற்ற, தெளிவற்ற அல்லது தாமதமாகி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கே.கே.ஜீ.ஐ.டீ.பீ.விஜேதிலக
ஆளுநரின் செயலாளர்
மேல் மாகாணம்.
2025.07.04